

# நம்பிக்கையான நியமனதாரரின்

## துணையோடு உங்கள் மத்திய சேமநிதி (மசேநி) கணக்கைப் பாதுகாத்திடுங்கள்

சந்தேகத்திற்குரிய மசேநி பரிவர்த்தனைகளைக் கண்டறிய கூடுதல் கண்காணிப்பு தேவையா?

**இன்றே ஒரு நம்பிக்கையான நியமனதாரரை (Trusted Contact) நியமியுங்கள்**



## நம்பிக்கையான நியமனதாரர் (Trusted Contact) அறிவிப்புச் சேவை என்றால் என்ன?

பின்வரும் விண்ணப்பங்கள் செய்யப்படும்போது நீங்கள் பெறும் அதே அறிவிப்புகளைப் பெற ஒரு நம்பிக்கையான நியமனதாரரை நியமிக்கும் விருப்பத் தேர்வு சேவை:

- உடனடி ஒய்வுகாலத் தேவைகளுக்காக உங்கள் மசேநி பணத்தைப் பெற விண்ணப்பிக்கும்போது
- உங்கள் தினசரி பணம் பெறும் வரம்பை மாற்றும்போது
- உங்கள் வங்கிக் கணக்கு விவரங்களைப் புதுப்பிக்கும்போது
- உங்கள் தொடர்பு விவரங்களை மாற்றும்போது

## நம்பிக்கையான நியமனதாரரை ஏன் நியமிக்க வேண்டும்?

உங்கள் நம்பிக்கையான நியமனதாரர் பின்வருவனவற்றைச் செய்ய முடியும்:

- சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைகள் மற்றும் மோசடிகளைத் தொடக்கத்திலேயே கண்டறிய முடியும்.
- சந்தேகத்திற்கிடமான மோசடிகள் குறித்துப் புகாரளிக்க உங்களுக்கு ஆலோசனையோ வழிகாட்டலோ வழங்க முடியும்

**முக்கியக் குறிப்பு:** நம்பிக்கையான நியமனதாரர் மேற்கூறிய அறிவிப்புகளில் உள்ள தகவல்களைத் தவிர, உங்கள் மசேநி கணக்கின் மற்ற விவரங்களைப் பார்க்கவோ அல்லது உங்கள் சார்பாகப் பரிவர்த்தனைகளைச் செய்யவோ முடியாது

# நம்பிக்கையான நியமனதாரரை எவ்வாறு நியமிப்பது?

## 1: அடையாளம் காணவும்

குடும்ப உறுப்பினர் போன்ற நீங்கள் முழுமையாக நம்பும் ஒருவரைத் தேர்ந்தெடுக்கவும்

**<u>நம்பிக்கையான நியமனதாரர்:</u>**

i) 21 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட சிங்கப்பூரராக அல்லது நிரந்தரவாசியாக இருக்க வேண்டும்
ii) மசேநி கழகத்திடம் பதிவுசெய்யப்பட்ட சிங்கப்பூர்க் கைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியைக் கொண்டிருக்க வேண்டும்
iii) மின்னஞ்சல்கள் மற்றும் குறுஞ்செய்திகளைத் தவறாமல் சரிபார்ப்பவராக இருக்க வேண்டும்

## 2: தெரிவிக்கவும்

அவர் உங்களின் நம்பிக்கையான நியமனதாரராக இருக்கச் விருப்பமா என்று கேட்டு, அவருடைய பொறுப்புகளை விளக்குங்கள்

## 3: நியமிக்கவும்

மசேநி இணையத்தளத்தில் நம்பிக்கையான நியமனதாரரை நியமிப்பதற்கு முன்:

- உங்கள் கணக்கு அமைப்புகளில் உங்கள் மற்றும் உங்கள் நியமிக்கப்படவிருக்கும் நபரின் தொடர்பு விவரங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளதை உறுதிபடுத்தவும்

நீங்கள் 2 நம்பிக்கையான நியமனதாரர்கள் வரை நியமிக்கலாம்

**குறிப்பு:** மசேநி இணையதளம் மூலம் எந்த நேரத்திலும் உங்கள் நம்பிக்கையான நியமனதாரர்களை நீக்கலாம் (உள்நுழைவு தேவை)

கூடுதல் விவரங்கள் தேவையா? மேலும் விவரங்களுக்கு இந்தக் கியூஆர் குறியீட்டை வருடவும் அல்லது **cpf.gov.sg/trustedcontact** என்ற இணையப்பக்கத்தைக் காணவும்

## எங்களுடன் இணைந்திருங்கள்!

CPFBoard

cpf_board

CPFvideos

cpf.gov.sg/whatsapp

## நினைவில் கொள்க!

மசேநி கழகம் உங்களை **6227 1188** என்ற எண்ணிலிருந்து மட்டுமே அழைக்கும், மேலும் தொலைபேசி அழைப்பின் வழி, உங்கள் பணத்தை வேறொரு கணக்கிற்கு மாற்றுமாறு அல்லது உங்கள் வங்கிக் கணக்கின் உள்நுழைவு விவரங்களைத் தெரிவிக்குமாறு மசேநி கழகம் **ஒருபோதும் கேட்காது**

மோசடிகளிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கான கூடுதல் ஆலோசனைகளுக்கு, **cpf.gov.sg/antiscamtips** என்ற இணையப்பக்கத்தைக் காணவும்